**Starting time 11.09 A.M.**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 41/2014**

Deposition of **<u>P.W. 1</u>** witnesses for Plaintiff solemnly affirmed by Tmt. K.Janaki, Gr. III Bench Clerk of this court, on 02-08-2022 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : தட்சிணாமூர்த்தி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** : தாவா சொத்தானது ஆதியில் இருசப்ப படையாட்சிக்கு கிரயம் மூலம் பாத்தியப்பட்டது என்றால், சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால், டிப்ளமோ படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் இருசப்ப படையாட்சி கடந்த 06.11.1941 அன் சர்வே எண் 208/3 மற்றும் 201/5-ல் உள்ள சொத்துக்களை கிரயம் பெற்ற கிரயப்பத்திரத்தின் சான்று நகல் என்றால், சாட்சி ஆவணத்தை படித்துவிட்டு சரி என்று சொல்கிறார். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆகும். அதன் பின்னிட்டு கடந்த 25.02.1980 அன்று அங்கமுத்து, கனகசபை, அய்யம்பெருமாள் ஆகியோர் தாவா சொத்தையும், வேறு சில சொத்துக்களையும் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால், மொத்தம் ஐந்து பேர் பாகம் பிரித்துக் கொண்டார்கள். எனது தகப்பனார் தாவா சொத்தை கிரயம் பெற்ற வா.சா.ஆ.2 கிரயப் பத்திரத்திற்கு மூலப்பத்திரம் மேற்படி 25.02.1980 தேதியிட்ட பாகப்பிரிவினைப்பத்திரம்தான் என்றால், சரிதான்.

2. எனது பிறந்த தேதி 15.06.1977 என்றால், சரிதான். வா.சா.ஆ.2 கிரயப்பத்திரத்தின் போது எனக்கு 8 வயது என்றால், சரிதான். மேற்படி 25.02.1980

தேதியிட்ட பாகப்பிரிவினையின் போது எனக்கு வயது 3 என்றால், சரிதான். எனவே 25.02.1980 தேதியிட்ட பாகப்பிரிவினை மற்றும் வா.சா.ஆ.2 கிரயப்பத்திரம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால், சரிதான், ஆனால் எனது தகப்பனார் சொல்லி தெரியும். 25.02.1980 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் பூர்த்தி அடையாத ஒரு வில்லை வீடு இருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதேபோல் 25.02.1980 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் மோட்டார் பம்பு செட் எதுவும் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். மேற்படி பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு அய்யம்பெருமாள் பூர்த்தி அடையாத வில்லை வீட்டை முழுமையாக கட்டி முடித்து குடியிருந்து வருகிறார் என்றால், சரியல்ல, அவர் குடிசை வீட்டில்தான் குடியிருந்து வருகிறார். பாகப்பிரிவினைப் பத்திரத்தில் குடிசை வீடு இருப்பதாக காட்டப்படவில்லை என்றால், சரிதான். பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு அய்யம்பெருமாள் வில்லை வீட்டை பூர்த்தி செய்து வந்தார் என்றும், கிணற்றுக்கு மோட்டார் பம்பு செட், மின் இணைப்பு பெற்று அனுபவித்து வந்தார் என்றால், சரியல்ல, மோட்டார் பம்பு செட் எனது தகப்பனார்தான் வாங்கினார், மின் இணைப்பு ஏற்கனவே இருந்தது. தற்போது உள்ள அதே மின் இணைப்பு தான் பாகப்பிரிவினையின் போதும் இருந்தது என்றால், சரிதான். என் தகப்பனார் பெயரில் உள்ள வா.சா.ஆ.2 கிரயப்பத்திரத்தில் மின் இணைப்பு, மோட்டார் பம்பு செட் பற்றி எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்றால், சாட்சி ஆவணத்தை படித்துவிட்டு, இல்லை என்று சொல்கிறார்.

3. 25.02.1980 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில், நாம் அனைவரும் ஒரே குடும்பமாக இருந்து பொது குடும்ப சொத்துக்களை அனுபவித்து வந்ததாகவும், பொது குடும்ப கடன்கள் எதுவும் இல்லை என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.2 கிரயப்பத்திரத்தில் பக்கம் 2-ல், கிரயம் செய்து கொடுத்த சொத்து அய்யம்பெருமாளுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட-வில்லை என்றால், சரியல்ல.

4. வா.சா.ஆ.2 கிரயப்பத்திரத்தில் செக்குபந்தி சொல்லப்படவில்லை என்றால்,

சரிதான். 25.02.1980 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் அசல் எங்களிடம்தான் உள்ளது என்றால், அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். நான் அதுபோல் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்க செய்யவில்லை என்றும், அதை ஒப்படைத்தால் எனது வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால் ஒப்படைக்கவில்லை என்றால், சரியல்ல. தாவா சொத்தை அய்யம்பெருமாள் எனது தகப்பனாருக்கு என்ன நோக்கத்திற்காக கிரயம் செய்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால், எனது தகப்பனார் மூலம் தெரிந்து கொண்டேன். என்ன காரணத்திற்காக அய்யம்பெருமாள் கிரயம் செய்து கொடுத்தார் என்றால், அவரது குடும்ப கடன்களை தீர்க்கவும், புரோநோட் கடன்களை தீர்க்கவும் தாவா சொத்துக்களை கிரயம் செய்து கொடுத்தார். யாரிடமிருந்து வாங்கிய புரோநோட் கடன் என்று கிரயப்பத்திரத்தில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால், இல்லை. புரோநோட்டையும், புரோநோட் கடன்களை தீர்த்ததற்கான ரசீதுகளையும் நான் வாங்கி கொண்டேனா என்றால், அது எனது தகப்பனாருக்குத்தான் தெரியும். புரோநோட் கடன் தீர்த்தது சம்மந்தமாக எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது. நான் சொல்வது போல் குடும்ப கடன்களை தீர்க்கவும், புரோநோட் கடன்களை தீர்க்கவும் தாவா சொத்துக்களை கிரயம் செய்து கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.2 கிரயப்பத்திரம் சரியான பிரதிபலனுக்காக எழுதிக் கொடுக்கப்பட்டதல்ல என்றால், சரியல்ல.

5. எனது தகப்பனாரும், இருசப்ப படையாட்சி ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால், சரிதான். எனவே இருசப்ப படையாட்சி குடும்பத்தை பற்றி எனது தகப்பனாருக்கு நன்கு தெரியும் என்றால், சரிதான். இருசப்ப படையாட்சிக்கு 3 மகன்கள், 2 மகள்கள் வாரிசுகள் என்றால், சரிதான். 25.02.1980 தேதியிட்ட பாகப்பிரிவினைப்பத்திரத்தில் இருசப்ப படையாட்சியின் இரண்டு மகள்களும் கையெழுத்து செய்யவில்லை என்றால், அதுபற்றி எனக்கு தெரியவில்லை. இருசப்ப படையாட்சியின் 3 மகன்களும், 2 மகள்களும் தற்போது உயிருடன் இல்லை என்றால், சரிதான். இருசப்ப படையாட்சியின் வாரிசுகள் 3 பேரும் சேர்ந்துதான் 25.02.1980 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தை எழுதிக் கொண்டார்கள்

என்றால், சரியல்ல, 5 பேரும் சேர்ந்துதான் எழுதிக் கொண்டார்கள்.

6. அய்யம்பெருமாள் படையாட்சியின் மகள்தான் 2-ஆம் பிரதிவாதி லட்சுமி என்றால், சரிதான். இருசப்ப படையாட்சியின் இரண்டு மகள்கள் பெயர் அங்கம்மாள், அமிச்சி என்றால், சரிதான். அங்கம்மாளுக்கு 1 மகன், 1 மகள் என்றால், சரிதான். அங்கம்மாளின் மகன் முத்துசாமி என்பவர் சதீஷ் என்ற மகனை விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றால், சரிதான். அங்கம்மாளின் மகளும், அய்யம்பெருமாளின் மனைவிதான் 1-ஆம் பிரதிவாதி அழகம்மாள் என்றால், சரிதான். அமிச்சி என்பவருக்கு வள்ளி, அஞ்சலை என்ற இரண்டு மகள்கள் என்றால், அதுபற்றி எனக்கு சரியாக தெரியவில்லை.

7. இருசப்ப படையாட்சி அவருக்கு உரிமையான சொத்துக்களை எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் காலமாகிவிட்டார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. இருசப்ப படையாட்சிக்கு கனகசபை, அய்யம்பெருமாள், அங்கமுத்து, அங்கம்மாள் மற்றும் அமிச்சி என்ற 5 பேரும் வாரிசுகள் என்றால், சரிதான். எனவே இருசப்ப படையாட்சியின் வாரிசுகள் அனைவருக்கும் அவரது சொத்துக்களில் சமமாக உரிமை உள்ளது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. இருசப்ப படையாட்சியின் பெண் வாரிசுகளை விட்டுவிட்டு ஆண் வாரிசுகள் மட்டும் பாகப்பிரிவினை செய்து கொண்டதால் அந்த பாகப்பிரிவினைப் பத்திரமே சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல. எனது தகப்பனாரும், இருசப்ப படையாட்சியும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்களாக இருந்தும், பெண் வாரிசுகளை சேர்க்காமல் எழுதப்பட்டுள்ளதால் பாகப்பிரிவினைப் பத்திரத்தின் அடிப்படையில், உரிமை இல்லாத நபரிடமிருந்து தாவா சொத்தினை எனது தகப்பனார் கிரயம் பெற்றுள்ளதால் அக்கிரயமே சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

8. இருசப்ப படையாட்சியின் பெண் வாரிசுகளுக்கு அவரது சொத்துக்களில் உள்ள 2/5 பாக சொத்தை பொறுத்து ஆண் வாரிசுகள் எழுதிக் கொண்ட பத்திரமும், எனது தகப்பனாருக்கு எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரமும் சட்டபடி செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல. பெண் வாரிசுகளுக்குண்டான பாக சொத்தை

ஏமாற்ற வேண்டிதான் ஆண் வாரிசுகள் மட்டும் பெயரளவில் ஒரு பாகப்பிரிவினைப் பத்திரத்தை எழுதிக் கொண்டார்கள் என்றால், சரியல்ல. அய்யம்பெருமாள் படையாட்சி மனநலம் பாதிக்கப்பட்டு அவரது சகோதரிகளான அழகம்மாள், அமிச்சி ஆகியோரின் பராமரிப்பில்தான் இருந்து வந்தார் என்றால், சரியல்ல. அய்யம்பெருமாள் மனநிலை சரியில்லாத சமயத்தில், அவர்களது மற்ற இரண்டு சகோதரர்களான அங்கமுத்துவும், கனகசபையும் அவர்களுக்கு மட்டும் கூடுதல் சொத்துக்களை பாகமாக ஒதுக்கியும், அய்யம் பெருமாளுக்கு குறைவான சொத்தையும் பாகமாக ஒதுக்கி பாகப்பிரிவினைப் பத்திரத்தை எழுதிக் கொண்டார்கள் என்றால், சரியல்ல, அய்யம்பெருமாள் நல்ல மனநிலையில்தான் இருந்தார். வா.சா.ஆ.2 கிரயத்தின் போதும், அதற்கு முன்பு பாகப் பிரிவினையின் போதும் நான் சிறு வயதாக இருந்ததால் அய்யம்பெருமாள் எப்படிப்பட்ட மனநிலையில் இருந்தார் என்று எனக்கு தெரியாது என்றால், சரியல்ல.

9. எனது தகப்பனாரும் அய்யம்பெருமாள் மனநிலை சரியில்லாததை பயன்படுத்தி, அவர்களது சகோதரிகளின் பாகத்தை அபகரிக்க வேண்டி வா.சா.ஆ.2 கிரயப்பத்திரத்தை எனது தகப்பனார் எழுதி வாங்கி கொண்டார் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.2 கிரயப்பத்திரத்தில் இருசப்ப படையாட்சியின் பெண் வாரிசுகளிடம் கையெழுத்து வாங்கவில்லை என்றால், அதுபற்றி எனக்கு தெரியவில்லை. பாகப்பிரிவினைப்பத்திரமும், எனது தகப்பனார் பெயரில் உள்ள வா.சா.ஆ.2 கிரயப்பத்திரமும் பெயரளவில் எழுதப்பட்டது என்றும், அவைகள் நடைமுறைக்கே வரவில்லை என்றால், சரியல்ல, கிரயப்பத்திரத்தின் அடிப்படையில் எனது தகப்பனார் பெயரிலும், அதன் பின்னிட்டு பாகப்பிரிவினைப்பத்திரத்தின் அடிப்படையிலும் எனது பெயரிலும் தாவா சொத்தை வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து கொண்டோம். எனது தகப்பனாருக்கே உரிமை இல்லாத தாவா சொத்தை இவ்வழக்கிற்கு பின்னிட்டு வா.சா.ஆ.3 பாகப்பிரிவினைப் பத்திரத்தை எனது குடும்பத்தை சேர்ந்தவர்கள் எழுதிக் கொண்டோம் என்றால், எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தை தான் அவரது காலத்திற்கு பின்னிட்டு நாங்கள் பாகம் பிரித்துக் கொண்டோம்.

10. உரிமையே இல்லாமல் வா.சா.ஆ.3 பாகப்பிரிவினைப் பத்திரத்தை எழுதிக் கொண்டு அதனடிப்படையில் வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து கொண்டோம் என்றால், சரியல்ல, உரிமை உள்ள சொத்தை தான் பாகம் பிரித்துக் கொண்டு பெயர் மாற்றம் செய்து கொண்டோம். வா.சா.ஆ.2, 3 ஆவணங்களும், அதற்கு முன்னிட்ட பாகப்பிரிவினைப் பத்திரமும் பிரிதிவாதிகளை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல.

11. வா.சா.ஆ.3 பாகப்பிரிவினைப் பத்திரத்தில் இவ்வழக்கு நிலுவையில் இருப்பது குறித்து எழுதப்பட்டுள்ளதா என்றால், இல்லை. தாவா சொத்து விவரத்தில் 7 -1/2 **HP** மின் இணைப்பு இருப்பதாக சொல்லிவிட்டு வா.சா.ஆ.3 பாகப்பிரிவினைப் பத்திரத்தில் 5 **HP** என்று சொல்லப்பட்டுள்ளது என்றால், ஏற்கனவே 7-1/2 **HP** இருந்தது. தற்போது 5 **HP** மட்டும்தான் உள்ளது. அதுபற்றி தாவாவில் திருத்தம் செய்யவில்லை என்றால், சரிதான். இருசப்ப படையாட்சியின் இரு மகள்களும் பாகம் பிரிக்க கேட்டதால், அது குறித்து 01.01.1980 அன்று ஒரு பஞ்சாயத்து நடந்தது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த பஞ்சாயத்தில் ஒரு குடும்ப ஏற்பாடு எழுதப்பட்டது என்றும், அதில் தாவா சொத்தின் கிழபுறத்தில் 72 செண்ட் பெண் வாரிசுகளுக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால், சரியல்ல. அந்த 72 செண்ட் சொத்தை 25.02.1980 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்திற்கு முன்பிருந்தே பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல. மேற்படி உண்மைகளை மறைத்துவிட்டு பாகப் பிரிவினைப் பத்திரமும், கிரயப்பத்திரமும் எழுதப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

12. தாவா சொத்துக்களை பொறுத்து எங்களால் ஏற்படுத்தியுள்ள எந்த வில்லங்கமும் பிரதிவாதிகளின் 2/5 பாக சொத்தை பெர்றுத்து கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல. அங்கம்மாளின் வாரிசுகளையும், அமிச்சியின் வாரிசுகளையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால், சரிதான். அத்தியாவசிய தரப்பினர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தினால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால், சரியல்ல. தாவாவில் நாங்கள் கேட்டுள்ள

விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்பதால் வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time : 12.11 P.M.

**ஒப்பம்/- ஜி.யுவராஜ்**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**